## இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை - 2018

---

### 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் தொடர்பான கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற் கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத் தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமையின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் போது அதிகார சபையினை தொடர்ச்சியாக நடத்திச் செல்வதற்கான இயலுமையைத் தீர்மானித்தல் முகாமையின் பொறுப்பு என்பதுடன், முகாமை அதிகார சபையினை முடிவுறுத்துவதற்கு அபிப்பிராயப்படும் எனின் அல்லது வேறு மாற்று வழி ஒன்று காணப்படாதவிடத்து தொழிற்பாட்டினை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் அன்றி அதிகார சபையினை தொடர்ச்சியாக நடத்திச் செல்லும் அடிப்படையில்

கணக்கீடுகளைப் பேணி அத்துடன் அதிகார சபையினை தொடர்ச்சியாக நடத்திச் செல்லல் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமையின் பொறுப்பாகும்.

இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொறுப்பு, நிர்வாகம் மேற் கொள்ளும் தரப்பினரின் மூலமும் ஏற்கப்படுகிறது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பாக விளக்கம் ஒன்றினைப் பெற்றிருந்த போதும் உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயம் ஒன்றைத் தெரிவிப்பதற்கு எண்ணவில்லை.
- முகாமை மூலம் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருந்தக் கூடிய தன்மை மற்றும் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புற்ற வெளிப்படுத்தல்கள் என்பவற்றின் நியாயத் தன்மை மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தொடர்ச்சியான தொழிற்பாடு தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை ஒன்று உள்ளதா என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீடு தொடர்பாக

நிறுவனத்தின் தொடர்ச்சியான தொழிற்பாடு தொடர்பான அடிப்படை பயன்படுத்தல் சார்பு தீர்மானிக்கப்பட்டது. போதியளவு நிச்சயமற்ற தன்மை ஒன்று உள்ளதாக நான் தீர்மானித்தால் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாவிட்டால் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்படல் வேண்டும். எனது முடிவுகள் கணக்காய்வாளர் அறிக்கையின் திகதி வரை பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் மீது அடிப்படையானவை ஆகும். அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். எனினும், எதிர் கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் அடிப்படையில் தொடர்ச்சியான தொழிற்பாடு நிறைவு பெறக் கூடும்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டது.

இயன்றளவு மற்றும் அவசியமான எந்த நேரத்திலும் கீழ் வரும் விடயங்களைப் பரீட்சித்தல் தொடர்பாக கணக்காய்வு விடயப் நோக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல் வழங்கல் குறித்து அதிகார சபையின் தொடர்ச்சியான செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடிய வகையில் அதன் ஒழுங்குகள், அமைப்புகள், நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவும் திட்டமிடப்பட்டு உள்ளதா என்பதையும் மற்றும் அதன் ஒழுங்குகள், அமைப்புகள், நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் பயனுள்ள வகையில் பேணப்படுகின்றதா என்பதையும்,
- ஏதேனும் தொடர்புற்ற எழுத்திலான சட்டம் ஒன்றிற்கு அல்லது அதிகார சபையின் கட்டுப்பாட்டு சபை மூலம் விதிக்கப்பட்டுள்ள வேறு ஏதாவது பொது அல்லது விஷேட கட்டளை ஒன்றிற்கு இணங்க அதிகார சபை தொழிற்பட்டுள்ளது என்பதையும்,
- தனது அதிகாரம், பணிகள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றிற்கு இணங்க தொழிற்பட்டுள்ளது என்பதையும்,
- வளங்கள் சிக்கன அடிப்படையிலும், செயற் திறன் மிக்க அடிப்படையிலும் பயன் மிக்க அடிப்படையிலும் கால எல்லைக்குள் மற்றும் தொடர்புற்ற சட்ட திட்டங்களுக்கு இணங்க தொகுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்,

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

----------------------------

### 1.5.1 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

----------------------------------------------------------------------------------------------------

கொடுக்கல் வாங்கல் முகாமையினை பொது மற்றும் குறிப்பிட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல், தொடர்புற்ற அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்கள் தொடர்பாக கணக்கீட்டுச் செயற்பாட்டுத் தன்மையைப் பேணிச் செல்லல், முகாமையின் பொது மற்றும் குறிப்பிட்ட அதிகாரத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான கணக்கீட்டுச் செயற்பாட்டுத் தன்மையை நிலவுகின்ற சொத்துக்களுடன் நியாயமான கால எல்லைகளுக்குள் ஒப்பீடு செய்து அத்துடன் ஏதேனும் வேறுபாடு காணப்பட்டால் அவை தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்தல் என்பவை தொடர்பாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவான “ நேர்த்தியாகத் திட்டமிடப்பட்ட “ உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை ஒன்று நிறுவனத்தின் மூலம் பேணிச் செல்லல் அவசியமாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறிப்பிட்ட நியமங்களுடன் குறிப்புக்கள் சகிதம் இணங்காமை | முகாமையின் அபிப்பிராயம் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபை மூலம் சென்ற வருடத்தில் பணிக் கொடை கணிப்பீடு செய்யும் போது மொத்த சம்பளத்தின் இணக்கக் கொடுப்பனவு உட்பட பணிக் கொடை ஒதுக்கம் கணிப்பீடு செய்ததன் காரணமாக ரூபா 12,114,266 பெறுமதியான தொகை மிகையாக ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தது. மேலும் கணக்கீட்டு நியமம் 3 இல் 47 ஆவது பந்தியின் (அ) வின் பிரகாரம் மீளாய்வு ஆண்டின் போது தவறினைத் திருத்தி ஒப்பீட்டு பெறுமானங்கள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்க வில்லை. | பணிக் கொடை ஒதுக்கம் நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களின் நிதிப் பெறுமானங்களுக்கு (அதாவது நிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டத்திற்கு) எதிர்பாராமல் ஏற்படும் தாக்கங்களைக் குறைத்துக் கொள்ளும் அடிப்படையில் மேற் கொள்ளப்படுகிறது என்பதுடன், கொடுப்பனவு மேற் கொள்ளும் போது சரியாகன் கணிப்பீடு செய்து கொடுப்பனவு மேற் கொள்ளப்படுகிறது. ஏதிர் காலத்தில் சரி செய்தல் கொடுப்பனவு அடிப்படைச் சம்பளத்திற்கு நிச்சயமாகச் சேர்க்கப்படும் என்பதனால் பணிக் கொடை ஒதுக்கம் செய்தல் தொடர்பாக சரி செய்தல் கொடுப்பனவைச் சம்பந்தப்படுத்துதல் பாதுகாப்பு எண்ணக் கருவிற்கு (Prudence Concept) இணைந்து செல்லும். | 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் திகதியின் 02/20116 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கைக்கு இணங்க செலுத்தப்படும் அடிப்படை சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவுக் கெடுப்பனவு தொடர்பான பணிக் கொடை ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இல் நியமத்தின் 47 பிரிவின் பிரகாரம் ஆதனங்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் நியாயமான பெறுமதி அதனது தாங்கக் கூடிய பெறுமதியில் இருந்து பொருண்மையாக வித்தியாசப்படும் போது, 03 வருடங்களுக்கு அல்லது 5 வருடங்களுக்கு ஒரு முறை மீள் மதிப்பீடு மேற் கொள்ளல் போதியளவானதாகக் காணப்பட்ட போதிலும், அதிகார சபை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டான 1998 ஆண்டின் பின்னர் அனைத்து சொத்துக்கள் தொடர்பிலும் மீள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டிருக்கவில்லை. | 2012. 12. 31 ஆம் திகதி அன்று அனைத்து சொத்துக்களும் மீள் மதிப்பீடு செய்யப்படுவதற்காக வேண்டி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு 2013 ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருந்த போதும் அந்தத் திணைக்களத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைகள் பூரணமற்றதாகக் காணப்பட்டதால் அதனைத் திருத்தி பூரணமாக செய்து இன்னும் வழங்கப்படவில்லை என்ற காரணத்தினால் கணக்குகள் இடையே இணக்கப்பாடு மேற் கொள்வதற்கு இயலாமல் போயுள்ளது. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக் கூற்று அறிக்கைகள் தயார் செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 10 இன் 14 ஆம் பிரிவின் பிரகாரம் திரண்ட நிதி அடிப்படையில் வருமானம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும் எனினும், தேசிய இரத்தினக் கல் ஆபரண அதிகார சபையுடன் செய்து கொள்ளப்பட்ட | 2018 ஆம் ஆண்டின் போது உடவளவை நிறுவனத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற இரத்தினக் கற்கள் தேசிய இரத்தினக் கல் ஆபரண அதிகார சபையின் மூலம் பொது ஏலத்தில் விடப்பட்டதுடன் எமக்கு பெறுமதிகள் தொடர்பாக எழுத்து மூலம் அறிவித்தல் தரப்படும் எனக் குறிப்பிட்ட போதும் 2018 ஆம் ஆண்டு இறுதி | பொது ஏலத்தில் விடப்படும் போது ஒப்பந்தத்திற்கு இணங்க தேசிய இரத்தினக் கல் ஆபரண அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய |

| | | |
|---|---|---|
| ஒப்பந்தத்திற்கு இணங்க 2018 ஆம் ஆண்டின் போது கிடைக்க வேண்டிய ரூபா 299,222 பெறுமதியான தொகை திரண்ட அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | வரை தகவல்கள் தரப்படவில்லை. திரண்ட நிதி அடிப்படையில் கணக்கீடு செய்வதற்கு அந்த வருமானத்தின் அல்லது செலவின் சரியான பெறுமதியை இனம் கண்டிருத்தல் வேண்டும். | அளவினைப் பெற்றுக் கொண்டு அதனைத் திரண்ட நிதி அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமையின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வு ஆண்டின் போது அதிகார சபைக்கு திறைசேரி மூலம் கிடைக்கப் பெற்ற மூலதன வழங்கல்கள் ரூபா 250,000,000 பெறுமதியான தொகை, அமைச்சின் மூலமான வழங்கல்கள் ரூபா 833,996,183 பெறுமதியான தொகை, மீண்டு வரும் செலவு கொடுப்பனவுகள் ரூபா 380,000,000 பெறுமதியான தொகை, மற்றும் உயிரியல் சொத்துக்கள் ரூபா 15,539,130 பெறுமதியான தொகை என்பன கணக்கீடு செய்தல் தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் இலக்கம் 2.6 மற்றும் இலக்கம் 2.11 என்பவற்றின் கீழ் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. எனினும் 2019 ஆம் ஆண்டில் கணக்குகள் தொடர்பாக பயன்படுத்திய முறைகள், அடிப்படைகள், கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களில் தாக்கம் செலுத்தும் தகவல்கள் தொடர்பாக வெளிப்படுத்தல்கள் மேற் கொள்வதனை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 1.5.4 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமையின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 கட்டுமான ஒப்பந்தங்கள் மீதான காப்பு நிதி ரூபா 3,097,101 பெறுமதியான தொகை மீளாய்வு ஆண்டின் போது செலுத்தப்பட்டிருக்க வில்லை என்ற போதும் நிதிப் பாய்ச்சற் கூற்றில் புத்துருவாகும் வேலைகளின் பெறுமதியான ரூபா 56,814,799 தொகையின் உள்ளே அது சேர்க்கப்பட்டு இருந்தது. | 2018 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தயார் செய்யும் போது தவறுதலாக கட்டுமான ஒப்பந்தங்கள் மீதான காப்பு நிதி பதியப்பட்டு இருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது இந்த விடயத்தினையும் கவனத்தில் எடுத்து செயற்படுவேன். | பிழைகள் இன்றி சரியாக நிதிப் பாய்ச்சற் கூற்றுக்கள் தயார் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நுவரெலியா பிரதேச நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி மையம் அமைந்துள்ள காணியானது 1999 ஆம் ஆண்டு அமைச்சின் மூலம் கொடையாக அதிகார சபைக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டது என்பதுடன் அதன் பெறுமதி ரூபா 12,635,000 தொகை எனக் கணிப்பிடப்பட்டு கணக்கீடுகளில் உள்ளடக்கப் பட்டிருந்தது. பின்னர் இந்த இடம் சம்பந்தமாக உருவான தீர்த்தல் தொடர்பான பிரச்சினை காரணமாக மீளாய்வு ஆண்டின் போது இந்தக் காணியைக் கொள்வனவு செய்வதற்காக வேண்டி அரச கூட்டுத் தாபனம் ஒன்றிற்கு ரூபா 9,237,500 பெறுமதியான தொகை வழங்கப்பட்டிருந்தது. பின்னர் செலுத்தப்பட்ட நிதித் தொகை அரச கொடை தொடர்பான மூலதன இருப்பில் இருந்து குறைத்துக் காட்டப்படுவதற்குப் பதிலாக காணியின் பெறுமதிக்கு சேர்க்கப்பட்டிருந்தது. | காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 18,475,000/- பெறுமதியான தொகையென அறிவிக்கப் பட்டிருந்தது. காணியின் பெறுமதியாக கணக்குகளில் பதிய வேண்டிய பெறுமதி ரூபா 5,840,000/- தொகையாகும் என்பதுடன் அதற்கு இணங்க மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்ட நிதி ரூபா 3,397,500 பெறுமதியான தொகை ஆகும். எனினும் காணியின் பெறுமதி ரூபா 18,475,000/- பெறுமதியான தொகையென கணக்குகளினூடே இனங் கண்டு கொள்ள வெண்டுமெனக் குறிப்பிடப் பட்டில்லை என்பதுடன் இந்தப் பெறுமதியும் 2014 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 16 ஆம் திகதி மதப்பீட்டுத் திணைக்களத்தால் பெறப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ஆகும். | மதிப்பீட்டுப் பெறுமதிக்கு காணி கணக்கீடு செய்யப்பட்டு உள்ளதால் பின்னர் செலுத்தப்பட்ட நிதி இருப்புக்களி லிருந்து குறைத்துக் காட்டப்படுதல் வெண்டும். |
| (இ) | மீளாய்வு ஆண்டில் டிசம்பர் 31 ஆம் திகதி அன்றைக்கு வேலை பூர்த்தி செய்யப்பட்ட கட்டுமான ஒப்பந்தங்கள் 19 இன் வேலைப் பெறுமதி கணக்கீடு செய்யும் போது, கணக்குகளில் உள்ளடக்கப்பட வேண்டிய பெறுமதியை விட ரூபா 35,808,699 பெறுமதியான தொகை குறைவாகவும், 08 கட்டுமான ஒப்பந்தங்கள் தொடர்பாகக் கணக்கீடு செய்ய வேண்டிய பெறுமதியை விட ரூபா 11,361,326 பெறுமதியான தொகை மிகையாகவும், நிதிக் கூற்றுக்களில் காட்டப் பட்டிருந்தது. | பூர்த்தி செய்யப்பட்ட கட்டுமான ஒப்பந்தங்கள் மூலதனமாகக் கணிப்பிடப்பட்டதுடன் கட்டுமான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கட்டுமான ஒப்பந்தங்கள் புத்துருவாகும் வேலையாக இனங் காணப்பட்டது. கணக்காய்வு வினவலில் காட்டப்பட்டுள்ள தகவல்களை ஆய்வு செய்து 2019 ஆம் ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறைவு செய்யப்பட்டு பூர்த்தியாக்கப்பட்ட கட்டுமானங்கள் கணக்கீடுகளில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | உடவளவை பிரதேச நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி மையத்தில் தொழிலாளர் விடுதி நிர்மாணப் பணிகள் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டிருந்த வேளை அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 12,346,772 பெறுமதியான தொகை கட்டிடங்கள் எனும் வகையில் கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதியானது நிர்மாணப் பணிகள் முடிவுறுத்தப்பட்டு ஒப்பந்தக் காரரிடமிருந்து பொறுப்பேற்றுக் கொண்ட தினம் என்பதுடன் கடைசிப் பற்றுச் சீட்டு 2019 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. இந்த நிர்மாணம் ஒரு சொத்து அடிப்படையில் இனங் கண்டு கொள்வதற்காக வேண்டி பூரண நிர்மாணப் பெறுமதி ஒன்று நிதிப் பிரிவிற்கு அறிக்கை செய்யப்படாமை மற்றும் கணக்கீடு செய்வதற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக | நிறைவு செய்யப்பட்டு பூர்த்தியாக்கப்பட்ட கட்டிடங்கள் சொத்துக்கள் வகையில் கணக்கீடுகளில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இந்த நிர்மாணம், செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் நிதிக் கூற்றுக்களில் இனம் காணப்பபட்டிருந்தது. | |
| (உ) | கணக்கீட்டுக் கொள்கை ஒன்று இல்லாமை காரணமாக மூலதனக் கொடைகளில் 2014 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வு ஆண்டு வரை செலவு செய்யப்பட்ட வருமானத்திற்கு பதியப் பட்டிருந்த ரூபா பெறுமதியான தொகை மீண்டு வரும் செலவு வடிவத்திலான செலவுகளுக்கு தொடர்புற்ற கொடைகள், வருமானக் கூற்றில் வருமானமாகக் கணக்கீடு செய்யப்படாது ஒரு இருப்பாக பதிவு செய்யப்பட்டு இருந்தது. இந்த வகையில் கணக்கீடு வைத்தல் காரணமாக மீளாய்வு ஆண்டின் நட்டமும் ரூபா 54,726,364 பெறுமதி தொகையால் நிதிக் கூற்று அறிக்கைகளில் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியான முறைமையை இனங் கண்டு 2019 ஆம் ஆண்டிலிருந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூலதனக் கொடைகள் மற்றும் மீணடு வரும் செலவு கொடைகள் சரியான முறையில் இனங் கண்டு இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்கீட்டுக் கொள்கைகள் தயார் செய்து அதற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயார் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஊ) | உயிரியல் வள சொத்துக்கள் மதிப்பீடு செய்வதற்கான கொள்கை ஒன்று இல்லாததன் காரணமாக அதிகார சபை மூலம் மீன் குஞ்சுகளை இனப் பெருக்கம் செய்யும் நோக்கில் பேணிச் செல்கின்ற தாய் மீன் தொகையின் ஆரம்ப மற்றும் இறுதித் தொகைகளின் பெறுமதி அதன் நியாயமான பெறுமதியை இனங் கண்டு கொள்ளாது விற்பனைக் கிரயம் சரி செய்யப் பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வு ஆண்டின் போது மொத்த இலாபம் ரூபா பெறுமதியான தொகையால் மிகையாகக் காட்டப் பட்டிருந்தது. | விற்பனைக் கிரயம் இனங் கண்டு கொள்ளப்படா விட்டால் தாய் மீன்கள் சொத்துக்கள் எனும் அடிப்படையில் இனங் காட்டப்படல் வேண்டும். அவ்வாறு செய்யப்பட்டால் வருடாந்த ஆரம்ப மற்றும் இறுதித் தாய் மீன்கள் தொகைகளின் மீதிகள் இரண்டுக்கும் இடையில் ஏற்படுகின்ற குறை / மிகை வித்தியாசங்களை இலாப நட்டக் கணக்கில் இணக்கம் செய்யப்படல் வெண்டும். அதற்கு அமைய மீளாய்வு ஆண்டின் போது நட்டம் குறைவாகக் காட்டப் பட்டிருக்கவில்லை. | தாய் மீன் தொகையினை உயிரியல் வள சொத்துக்கள் எனும் அடிப்படையில் கணக்கீடு செய்வதற்கு இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 41 க்கு இணங்க பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (எ) | ஆதிகார சபை மூலம் பயன் படுத்தப்படுகின்ற 16 காணிகளின் பெறுமதி 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வில்லை. அதே போன்று 1998 ஆம் ஆண்டின் போது அதிகார சபையை நிறுவும் போது ஒதுக்கப்பட்ட உடவளவையில் அமைந்துள்ள ரூபா 89,630,000 பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப் பட்டிருந்த இரண்டு காணிகளின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | இந்தக் காணிகள் மீள் மதிப்பீடு செய்து பெறுமதிகள் பெறப் பட்டிருக்கவில்லை. இந்த இடங்களில் இன்னும் சிலவற்றினை அதிகார சபைக்கு உரிமை மாற்றம் செய்து கொள்வதற்கான நடவடிக்கை முடிவு பெறவில்லை என்பதுடன் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றின் மூலமாவது உரிமை மாற்றம் செய்து மீள் மதிப்பீட்டு நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டி உள்ளது. | அதிகார சபையின் சொத்துக்கள் சரியான முறையில் இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும் என்பதுடன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமானம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | மீளாய்வு ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் ரூபா 2,000,000 பெறுமதியான நீண்ட கால முதலீடு, நடை முறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டு இருந்தது. | பதில் வழங்கப் படவில்லை. | நீண்ட கால முதலீடுகள் நடை முறைச் சொத்துக்கள் அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஐ) | அதிகார சபை மூலம் வேறு நிறுவனங்களுக்குப் பொறுப்பளிக்கப்பட்ட பொலன்னறுவை, பிட்டியன, பனாப் பிட்டிய எனும் 03 காணிகளின் பெறுமதி ரூபா 5,000,000 தொகையை மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் கணக்குகளில் இருந்து நீக்குவதற்கு அதிகார சபை மூலம் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் கணக்குகளில் இருந்து இந்தக் காணிகளின் பெறுமதியை நீக்குவதற்கு அதிகார சபை நடவடிக்கைகளை மேற் கொள்ளும். | வேறு நிறுவனங்களுக்குப் பொறுப்பளிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதிகளை கணக்குகளில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் |

## 1.6 சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் ஒவ்வாமை.

| சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கான குறிப்பு. | ஒவ்வாமை ரூபா | முகாமையின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள். | | | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 135 (4) | வவுச்சர்களை உறுதிப் படுத்துவதற்கு அதிகாரம் அளிக்கப்படாத அலுவலர் ஒருவர் 62 வவுச்சர்களை உறுதிப் படுத்தி கொடுப்பனவுகள் மேற் கொள்ளப்பட்டிருந்நதுடன் அதன் பெறுமதி ரூபா 96,889,323 தொகை ஆகும். | அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் குறிப்பிட்ட உறுதிப் படுத்தல்கள் மற்றும் ஒப்புதல்களுக்கு அமைய மேற் கொள்ளப்பட்டது. யாராவது ஒரு அலுவலர் சேவைக்கு சமூகம் தராத சந்தர்ப்பத்தில் அவர் அல்லது அவள் சார்பாக பதில் கையொப்பம் இடும் அலுவலருக்கு அதிகாரமளிப்பது அதிகார சபையின் பொதுவான பாரம்பரியமாகும். | நிதி ஒழுங்கு விதிகள் 138 இன் பிரகாரம் பொறுப்பான அதிகாரிகளுக்கு அதிகாரத்தினை பகிர்ந்தளித்தல் வேண்டும். வவுச்சர்களை உறுதிப் படுத்துதல் மற்றும் ஒப்புதல் வழங்குதல் நிதி ஒழுங்கு விதிகளின் பிரமாணங்களுக்கு அமைய தயார் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) நிதிப் பிரமாணங்கள் 138(8) | வவுச்சர் பிழையற்றதாகவும் சகல விளக்கங்கள் தொடர்பாக பூரணமானது எனவும் வவுச்சரை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனினும் அவ்வாறு உறுதிப்படுத்தல்கள் மற்றும் மூல ஆவணங்கள் இன்றி வவுச்சர் பிரதிகளை அடிப்படையாகக் கொண்டு ரூபா 5,500,000 பெறுமதியான தொகை செலுத்தப் பட்டிருந்தது. | பதில் வழங்கப் படவில்லை. | நிதி ஒழுங்கு விதிகள் 138 (8) இன் பிரகாரம் வவுச்சர் மற்றும் ஏனைய ஆவணங்கள் மூல ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். |
| (iii) நிதிப் பிரமாணங்கள் 396 | வழங்கப்பட்ட தினத்தில் இருந்து 06 மாதங்கள் கடந்திருந்த ரூபா 152,056 பெறுமதி கொண்ட 8 காசோலைகள் தொடர்பாக நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | 06 மாதங்கள் கடந்திருந்த ரூபா 152,056 பெறுமதி கொண்ட காசோலைகள் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாது விட்டமைக்கான காரணங்களைக் கண்டு பிடித்து நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தல் வழங்ப்பட்டது. | நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் காலாவதியாகிய காசோலைகள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ)நிதிப் பிரமாணங்கள் 610 மற்றும் 2011 ஏப்ரல் 21 ஆம் திகதியிடப்பட்ட MOFP/ERD/2011/01 ஆம் இலக்க மற்றும் 2014 ஜூன் மாத 26 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை MOFP/ERD/2014/01 ஆம் இலக்கச் சுற்றறிக்கை. | 2018 ஆம் ஆண்டின் போது 5 சந்தர்ப்பங்களில் கிடைக்கப் பெற்ற ரூபா 14,602,284 பெறுமதியான வெளி நாட்டுக் கொடைகள் தொடர்பான அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் வெளி நாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்படல் வேண்டும் எனினும் அவ்வாறு செயற்படாது வெளி நாட்டு உதவி வழங்கும் நிறுவனத்துடன் நேரடித் தொடர்புகளைப் பேணி அந்த தரப்பினருடன் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருந்தது. | இந்த ஆராய்ச்சி நடவடிக்கைகள் முக்கியமாக வயம்ப பல் கலைக் கழகம் மற்றும் றுஹுணு பல் கலைக் கழகம் ஊடாக மேற் கொள்ளப்படுவதுடன் அது தொடர்பாக தேவையான நன்னீர் இறால் குஞ்சுகளை சேமித்து வைக்கும் நடவடிக்கைகள் தொடர்பான ஒருங்கிணைப்பு எமது அதிகார சபை மூலம் மேற் கொள்ளப்படுகிறது. | நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் சுற்றறிக்கை விதிகளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் xv ஆவது அத்தியாயத்தின் 5.2 மற்றும் 5.2.1 | 2015 ஆம் ஆண்டின் போது சம்பளம் அற்ற விடுமுறை பெற்று கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக வெளி நாடு சென்ற ஒரு அலுவலர் 4 வருடங்களும் 7 மாதங்களும் 6 நாட்கள் கட்டயா சேவை காலத்தில் சேவை செய்யாமை சம்பந்தமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 681,588 பெறுமதியான தொகை அந்த அலுவலரிடமிருந்து அறவிடப் பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டின் போது சம்பளம் அற்ற விடுமுறை பெற்று கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக வெளி நாடு சென்ற திரு உபுல் வசந்த குமார கட்டயா சேவை காலத்தில் சேவை செய்யாமை சம்பந்தமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 681,588 பெறுமதியான தொகை அந்த அலுவலரிடமிருந்து அறவிடுவதற்கு அவருக்குக் கடிதம் அனுப்பப் பட்டுள்ளது. அந்தப் பணத்தை அவரால் செலுத்துவது கடினம் எனவும் மீண்டும் சேவையில் இணைந்து கொள்ள இயலும் என்றும் அவர் அறிவித்துள்ளார். அவரை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ள பணிப்பாளர் சபை மறுப்புத் தெரிவித்துள்ளது. ஒப்பந்தத்திற்கு இணங்க பிணை தாரர்களிடமிருந்து இந்தப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. | தாபனக் கோவையின் xv ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப் பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி சார் பெறுபேறுகள்

மீளாய்வு ஆண்டின் தொழிற்பாடு சார் பெறுபேறுகள் ரூபா 80,646,668 பெறுமதியான தொகை பற்றாக்குறை காணப்பட்டதுடன் அதற்கு ஒத்ததாக சென்ற வருடத்தின் பற்றாக்குறை ரூபா 45,307,362 பெறுமதியான தொகையாகக் காணப்பட்டது. அதற்கு இணங்க நிதி சார் பெறுபேறுகளில் ரூபா 35,339,306 பெறுமதியான சரிவு அவதானிக்கப்பட்டது. இந்த சரிவுக்கு விற்பனை ரூபா 76.6 மில்லியன் மற்றும் மீண்டு வரும் வருமானம் ரூபா 36.9 மில்லியன் அதிகரித்த போதிலும் நிர்வாக செலவு மற்றும் வினியோக செலவுகள் முறையே ரூபா 98.2 மில்லியன் பெறுமதியாலும் மற்றும் ரூபா 62.5 மில்லியன் பெறுமதியாலும் அதிகரித்தமை பிரதானமாக தாக்கம் செலுத்தி இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத் திறனின்மை

| கணக்காய்வு கண்காணிப்பு | | முகாமையின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி பிரதான அலுவலகம் உட்பட 15 நிலையங்களில் ரூபா 21,409,109 பெறுமதியான மீன் பிடி வலைகள் எஞ்சிக் காணப்பட்ட போதிலும் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 31 ஆம் திகதி வரை தாய் மீன் முகாமைத்துவம் தொடர்பில் செலவு செய்யப்பட்ட ரூபா 8,930,315 பெறுமதியான தொகையில் 80 வீத அளவு அதாவது ரூபா 7,183,576 பெறுமதியான தொகை மீன் பிடி வலைகள் கொள்வனவு தொடர்பாக செலவு செய்யப்பட்டு இருந்தது. தம்புள்ளை, கலாவெவை, உடவளவை, இரணைமடு முறுத்தவளை மத்திய நிலையங்களில் ரூபா 17,708,604 பெறுமதியான வலைகள் இருப்பாகக் கையிருப்பில் காணப்படுகையில் அந் நிலையங்களுக்கே 2008 ஆம் ஆண்டில் ரூபா 4,900,000 பெறுமதியான வலைகள் வினியோகிக்கப்பட்டு இருந்தன. | உள் நாட்டு வழங்கல் நிறுவனங்களிடமிருந்து விலை கோரல்கள் மேற் கொள்ளப்பட்டு வெளி நாடுகளில் இருந்து கொள்வனவு செய்யப்படுதல் வேண்டும். கொள்வனவு நடவடிக்கைகள் தொடர்பாக 6 மாதங்களுக்கு மேற்படாத கால எல்லை எடுக்கும். இதன் காரணமாக தேவைப்படுகின்ற இந்த வலை வகைகளை மிகக் குறைந்தது மூன்று வருடங்களுக்காவது போதிய அளவான தொகை மொத்தமாக கொள்வனவு செய்யப்படுகிறது. | வலைகள் கொள்வனவு செய்வதற்கு முன்னர் அதிக பட்ச மற்றும் குறைந்த பட்ச இருப்பு மட்டங்களைப் பேண வேண்டும் என்பதுடன் கையிருப்பில் உள்ள இருப்பினை சரி பார்த்து தேவைக்கேற்ப கொள்வனவு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | கரும் புலி இறால் இனப் பெருக்கத்தை மேற் கொள்வதற்காக அரச மற்றும் தனியார் கூட்டுத் தொழில் முயற்சிகளின் கீழ் அதிகார சபை ரூபா 2,000,000 பெறுமதியான தொகை முதலீடு செய்து அமைக்கப்பட்ட குஞ்சுப் பொரிப்பகம் நிர்மாண முதலீட்டு ஒப்பந்தத்திற்கு இணங்க 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகள் தொடர்பாக அதிகார சபைக்கு உரித்தாக வேண்டிய இலாபப் பங்கினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. | 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ஆம் திகதி 2 ஆம் தடவையாக மீன் இருப்பு கொண்டு வரப்பட்டுள்ளதால் 2019 ஆம் ஆண்டு மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பெற்றுக் கொண்ட இலாபத்தில் 30% வீதத்தினை அதிகார சபைக்கு செலுத்துமாறு NQ/07/MO/LAGOON மற்றும் 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் ஊடாக ப்ழூ லெகூன் எக்வா கல்ச்சர் (தனி) நிறுவனத்துக்கு அறிவித்தலும் வழங்கப் பட்டடுள்ளது. | கூட்டுத் தொழில் முயற்சிகள் ஒப்பந்தத்திற்கு இணங்க 30% இலாபம் அறவிட்டுக் கொள்வதற்கு ட்டிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டி உள்ளது |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அதிகார சபையின் பனிப்பாளர் ஒருவருக்கு ஒதுக்கி இருந்த வாகனம் 2018 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 30 ஆம் திகதி விபத்து ஒன்றுக்கு உட்பட்டு ரூபா 5,164,091 நட்டம் ஏற்பட்டு இருந்தது. இது சம்பந்தமாக பொலிஸ் அறிக்கை பெற்று இருக்க வில்லை என்பதுன் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திததி ஆகும் போது 9 மாதங்கள் கடந்திருந்தும் பழுது பார்த்தோ அல்லது அதற்கான நட்ட ஈட்டை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளையோ எடுத்து இருக்க வில்லை. | இந்த வாகனம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் கீழ் காப்பீட்டுக்கு உட்படுத்தி உள்ள பெறுமானம் ரூபா 5,795,000.00 பெறுமதியான தொகை ஆகும். நட்ட ஈடாக ரூபா 3,500,000 அதிகார சபைக்கு செலுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டு உள்ளது. இந்தப் பணத் தொகைக்கு நாங்கள் உடன் படாமையால் எதிர் காலத்தில் சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்பட்டு உடனடியாக நட்ட ஈட்டைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | ஓய்வு பெற்ற அதிகாரிகள் 7 பேருக்கு பணிக் கொடை கொடுப்பனவை வழங்கும் போது மொத்த ஊதியத்தை கருத்திற் கொண்டமையால் மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 381,291 பெறுமதியான தொகையை மீட்டுக் கொள்வதற்கு 2019 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 10 ஆம் திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | பணிக் கொடை கொடுப்பனவை வழங்கும் போது இடைக்கால கொடுப்பனவுடன் ஊதியத்தை கருத்திற் கொண்டு கணக்கிட்டதன் காரணமாக மேலதிகமாக செலுத்த வெண்டி ஏற்பட்டது. எனினும் இந்த பணத்தை மீட்டெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. | சரியாக கணக்கிட்டு பண செலுத்தல்களை நிறைவேற்ற வேண்டியதுடன் அந்தப் பணத்தை மீட்டு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். |
| (உ) | களப்பு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூபா 161,400,000 பெறுமதியான களைகள் மற்றும் குப்பை அகற்றும் 03 இயந்திரங்களைக் கொள்வனவு சய்வதற்காக முற் பணமாக ரூபா 42,572,925 வழங்குனருக்கு செலுத்தி உள்ளதுடன் முற் பண கொடுப்பனவானது போலி பத்திரங்கள் மற்றும் போலி கையெழுத்துக்களால் ஆன போலி ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு கொண்டு செலுத்தப் பட்டிருந்தது. இவ்வாறு முறையற்ற வகையில் செலுத்திய ரூபா 42,572,925 பெறுமதியான பணமானது 6 மாத காலத்துக்கு தனியார் உபயோகத்கிற்கு வழங்கப்பட்டு மீண்டும் பெற்றுக் கொள்ளப் பட்டிருந்தது. | கொள்வனவு விதிகளுக்கு இணங்க அதிகார சபை மூலம் வழங்குணருக்கு வழங்கப்பட்ட முற்பணம் உண்டியல் பத்திரத்தினை அடிப்படையாகக் கொண்டு விடுவிக்கப் பட்டிருந்தது. உண்டியல் பத்திரத்தின் உண்மை பொய் நிலையை வழங்கிய வங்கியிடம் வினவுவதற்குப் பதிலாக அதிகார சபையின் சட்டப் பிரிவிடம் மட்டும் வினவப் பட்டிருந்தது. குறித்த நிறுவனத்தை கறுப்புப் பட்டியலில் சேர்க்குமாறு நீரியல் வள அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றும் அனுப்பப் பட்டுள்ளது. | இந்த விடயத்துக்கு சம்பந்தமான அதிகாரிகளுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து எதிர் காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளது. |
| (ஊ) | மன்னார் மாவட்டத்திலே ஓலைத்துடாவையில் கடல் அட்டை இனப் பெருக்க நிலையத்தை நிறுவுவதற்கு ஓர் ஏக்கர் நிலம் வழங்கப் பட்டிருந்தும் நான்கு ஏக்கர் நிலத்துக்கான நிர்மாணிப்புத் திட்டங்களை திட்டமிட்டு இருந்தமையால் அந்த தாங்கிகளில் உற்பத்தி செய்வதற்கு தீர்மானித்த கடல் | நிலம் மாற்றத்திற்கு உட்படுவதற்கு ஏற்ப திட்டங்கள் தயார் படுத்துவதற்காக ஆலோசனை நிலையத்திற்கு புதிதாக கொடுப்பனவு ஒன்றை செலுத்தாது ஆரம்பத்தில் செலத்திய தொகைக்கே மீண்டும் திட்ட மாற்றம் மேற் கொள்ளப்பட்டது. | சாத்தியப்பாட்டு ஆய்வு ஒன்றை மேற் கொண்டு சரியான திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

அட்டைகளின் எண்ணிக்கை 700,000 முதல் 1,000,000 வரை இருந்தாலும் அது 350,000 இற்கு மட்டுப் படுத்தப் பட்டிருந்தது. அதே போன்று இந்தத் திட்டம் சம்பந்தமாக எவ்வித சாத்தியப்பாட்டு ஆய்வு ஒன்றையும் மேற் கொள்ளாமலேயே ஆரம்பித்து வைக்கப் பட்டிருந்தது.

## 3.2 சர்ச்சைகளை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமையின் கருத்துத் தெரிவிப் | பரிந்துரை |
|---|---|---|
| மன்னார் மாவட்டத்தில் வனவிலங்கு பாதுகாப்பு வலயத்திற்கு உரித்தான நிலம் ஒன்றில் கடலோர மற்றும் கடல் வாழ் நீர் உயிரின வளர்ப்பு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையான காலப் பகுதிக்குள் தொடர்பான நிர்மாணப் பணிகளை மேற் கொள்வதற்குத் திட்டமிட்டு, குறித்த திட்டத்திற்கு நீர் மற்றும் மின்சாரத்தை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 25,185,181 பெறுமதியான தொகை செலவழிக்கப் பட்டிருந்தது. எனினும் 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆகும் போதும் இந்த நிலமானது சிக்கல் உள்ளதாக இருந்தமையால் குறித்த செயற் திட்டம் ஆரம்பிக்கப் படவில்லை என்பது பௌதீகக் கணக்காய்வின் போது அவதானிக்கப்ட்டது. | நிலம் ஆனது சிக்கலுள்ளதாக இருந்தமையால் இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பது தாமதம் அடைந்துள்ளது. வனவிலங்கு இயற்கை காப்பகத்திடமிருந்து குறித்த நிலப் பகுதியை சட்ட ரீதியாக மீட்டு எடுப்பதற்காக சூழற் ஆய்வு அறிக்கை (EAS அறிக்கை) வனவிலங்கு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப் பட்டுள்ளது. வனவிலங்கு திணைக்களத்தின் ஊடாக நிலப் பகுதியை சட்ட ரீதியாக விடுவிக்கும் வரை திட்டத்தின் ஏனைய செயற்பாடுகளை செயற்படுத்த இயலவில்லை. | சேயற் திட்டம் தொடர்பான சாத்தியப்பாட்டு ஆய்வறிக்கையை தயாரித்து வெற்றிகரமான திட்டம் ஒன்றாகக் காணப்பட்டால் மட்டும் அது தொடர்பாக அரச நிதியை செலவழிக்க வேண்டும் என்பதுடன் அதற்குத் தேவையான கட்டுப்பாட்டு முறைமைகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

## 3.3 செயற்திறன் குன்றிய அல்லது பயன்படுத்தப்படாத சொத்துக்கள், பொறித் தொகுதிகள், மற்றும் உபகரணங்கள்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமையின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| நுவரெலியா நீர் உயிர் வள நிலையத்தின் கீழ் உள்ள 04 மற்றும் 06 இலக்கங்களைக் கொண்ட அரச வீடுகள் புனர் நிர்மாணம் செய்யப் பட வேண்டிய நிலையில் உள்ளதோடு புனர் நிர்மானம் செய்து பாவனைக்கு எடுக்காது 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் கைவிடப் பட்டு இருந்தது | குறித்த வருடத்தின் வரையறுக்கப்பட்ட அரச ஒதுக்கங்களுக்கு அமைய அத்திய யவசியமான நிர்மாண பணிகளுக்கு முன்னுரிமை வழங்கியதோடு அரச ஒதுக்கங்களுக்கு ஏற்ப எதிர் காலத்தில் தேவைப் படுகின்ற புனர் நிர்மாணத்தை மேற் கொள்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு உள்ளது. | புனர் நிர்மாணம் செய்து உபயோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 3.4 செயற்திட்ட அல்லது முலதன செயற்பாட்டு தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமையின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நன்நீர் இறால்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் தேசிய உனவுத் திட்டத்தின் கீழ் தெகல்லராவ நன் நீர இறால் குஞ்சு பொரிப்பகம் நிர்மாணிப்பதற்கு 2017 ஆம் ஆண்டு ரூபா 102,322,224 பெறுமதியான தொகை செலவிடப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை ஆரம்பித்து 2018 ஆம் ஆண்டு நவம்பர் 05 ஆம் திகதி ஆகும் போது ஒரு வருடம் கடந்து இருந்தும் இனப் பெருக்க நிலையத்தில் இறால் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அதன் ஆரம்பக் கட்ட வேலைகள் பல ஏற்கனவே செய்யப்பட்டு உள்ள நிலையில் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் விதை உற்பத்தி செயற்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இது வரைக்கும் 1.42 மில்லியன் நன்னீர் இறால் உற்பத்திக்கு பின்னர் குடம்பிகள் உற்பத்தி செய்து வழங்கப் பட்டுள்ளன. | செயற் திட்டத்தின் நோக்கங்களை நிறை வேற்றிக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் |
| (ஆ) மீன் குஞ்சுகளை இனப் பெருக்கம் செய்து மீன் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் நீர்த் தேக்கங்களிற்கு விடுவிக்கும் நோக்குடன் நுவரெலியா நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி நிலையம் நிர்மானிக்கப் பட்டது. 2014 ஆம் ஆண்டு ட்ரவுட் மீன்கள் இனப் பெருக்கம் செய்யும் வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இருந் போதிலும் 2018 ஆம் ஆண்டு மே மாதம் முதல் ட்ரவுட் மீன்கள் ஆக்கிரமிப்பு கடல் மீன் இனமாக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் முலம் பெயரிடப்பட்டதன் காரணத்தினால் அத் திட்டம் நிறுத்தப்பட்டு இருந்தது. இதன் காரணமாகவே அந்த இறால் குஞ்சு பொரிப்பகத்தில் நிர்மானிக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் தாங்கிகள் மூலம் எந்தப் பயனும் பெறாமல் செயல் இழந்து காணப்பட்டது. | 2017 ஆம் ஆண்டு இந்த ட்ரவுட் மீன்கள் அறியப்படாத ஆக்கிரமிப்பு மீன் இனமாக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் உயிர் பல்லினப் பிரிவு மூலம் பெயரிடப் பட்டுள்ளது. அதற்கு இணங்க அந்த மீன் வகையின் இனப் பெருக்கம் மற்றும் பரவலாக்கல் நடவடிக்கையை கைவிட வேண்டி ஏற்பட்டது. வேறு தாய் மீன்களை உபயோகித்து பலன் மிக்க இனப் பெருக்கத்தை நுவரெலியா நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி நிலையத்தில் மேற் கொள்ளப்பட்டது. | வேறு மீன் வகைகள் வளர்ப்பதற்கு அல்லது ஏனைய பயனுள்ள செயற்பர்டுகளுக்கு இந்த சொத்துக்கள் பயன் படுத்தப் படுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

### 3.5 கொள்வனவு முகாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமையின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தில் 12 நிலையங்கள் தொடர்பாக ரூபா 59,975,000 பெறுமதி வாய்ந்த மீன் உணவு கொள்வனவு செய்யும் போது தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு மூலம் மீன் உணவு மாதிரிகளில் பூஞ்சை வளர்ச்சி மற்றும் மீன் சீர் கேடு என்பன தொடர்பான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளாமல் பாவணைக்குப் பொருத்தமற்ற மீன் உணவுகளைக் கொள்வனவு செய்ததன் காரணமாக 04 மாத காலத்திற்கு கோரப்பட்ட 17170 கிலோ மீன் உணவு வழங்கப் பட்டிருக்கவில்லை. | இங்கு ஈரப்பதன் அதிகரிக்கும் போது ஈரளிப்பு அதிகரித்து நுண்ணங்கிப் பரவலுக்கு ஏதுவான நிலைமை உருவாகும். ஈரம் உள்ள சூழல் ஒன்றில் களஞ்சியப்படுத்தல் மீன்களுக்கு பாதிப்பு ஏற்படல், களஞ்சிய சூழல் மாசடைதல் போன்ற விடயங்களும் தாக்கம் செலுத்துகின்றன. கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தில் உணவு நல்ல நிலையில் காணப்பட்டதுடன் இந்தக் காரணங்களினால் பின்னர் அவற்றிற்கு நுண்ணங்கி நோய்த் தொற்று ஏற்படும் வாய்ப்பு உண்டு. | உணவு கொள்வனவு செய்யும் போது கொள்வனவு வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும் என்பதுடன் களஞ்சியப் படுத்தல் சரியான நியமங்களுக்கு அமைய மேற் கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | குசலபங்கதெனிய கடல் அலங்கார மீன் குஞ்சுப் பொரிப்பக நிர்மாண ஒப்பந்த அளவு பற்றுச் சீட்டுக்களின் பிரகாரம் தற்போதுள்ள கட்டிடம் திருத்தி அமைக்கப்படுவதற்குப் பதிலாக அந்தக் கட்டிடத்தை அகற்றி மீண்டும் அலுவலகக் கட்டிடம் ஒன்று அமைத்தல் எனும் அடிப்படையில் அந்த உருப்படி, ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவான பற்றுச் சீட்டுக்களிலிருந்து மாற்றி அமைத்து அது தொடர்பான அளவினை மாற்றங்கள் மற்றும் ஒன்று சேர்ந்த புதிய உருப்படி விலைகள் தொடர்பாக பொறியியலாளரின் அனுமதியின் கீழ் ரூபா 943,869 பெறுமதியான தொகை செலுத்தப்பட்டிருந்த போதும் அது தொடர்பான சந்தர்ப்ப ஆணை வெளியிடப்பட்டு இருக்கவில்லை. | இங்கு முழு ஒப்பந்தத்தின் மதிப்பு மற்றும் கட்டுமானப் பணியை மேற்கொள்ளும் போது ஏற்படும் மிகைச் சேமிப்பை (Excess Savings) அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்தப் பணமானது மிகை ஆகாமையால் கொள்முதல் குழுவிடம் முன் வைத்து அனுமதி பெற்றுக் கொள்ளப் படவில்லை என்பதை அறிவிக்க விரும்புகிறேன். | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2006 கொள்வனவு வழிகாட்டல் கோவை 4:3:2 இன் வழிகாட்டல்களுக்கு இணங்க 100 மில்லியனை தாண்டாத மொத்த செலவுகள் மதிப்பீட்டு ஆணையத்தின் தலைவர் ஒப்புதல் அனுமதியளிக்க வேண்டி இருப்பினும் 3 ஒப்பந்தஙகளின் செலவீனங்கள் தொடர்பாக நிறுவன தலைவரின் ஒப்புதல் அனுமதி பெற்று இருக்கவில்லை. | எந்தவொரு செயற் திட்டத்திற்கும் ஆரம்பத்தில் கொள்முதல் குழுவினால் அனுமதி வழங்கப்பட வேண்டும் என்பதுடன் அந்த அனுமதி கிடைக்கப் பெற்ற செயற் திட்டத்தின் செயற்பாடு தொடர்பாக ஒப்பந்தம் ஒன்றிற்குச் செல்லல் இடம்பெறும். செயற் திட்டத்திற்கான பணியாட் தொகுதியினை வேலைக்கு அமர்த்திக் கொள்வதற்காக தலைவர் உள்ளடங்கலாக கொள்வனவுச் சபை மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய நடவடிக்கை மேற் கொள்ளப்படும். | 2006 கொள்வனவு வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல்களுக்கு இணங்க மொத்தக் கிரய மதிப்பீட்டிற்கு தலைவர் ஒப்புதல் வழங்க வேண்டும். |
| (ஈ) | ரூபா 1 மில்லியன் வரை மட்டும் பிரதேச கொள்வனவு குழுக்கள் நியமிக்கப்படல் வேண்டும் எனினும் ரூபா 2038201 பெறுமதியான கயிறு மற்றும் நூல் கொள்வனவு நடவடிக்கை தொடர்பாக பிரதேச கொள்வனவுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது. | ஆரம்பத்தில் இது குறைந்த மதிப்புடையதாகக் காணப்பட்டதுடன் அதன்படி பிரதேச கொள்வனவுக் குழு மூலம் கொள்வனவு செய்யப்பட்டது. ஆனால் பின்னர் அதன் மதிப்பு உயர்ந்துள்ளது. அதன் காரணமாக இது பிராந்திய கொள்வனவுக் குழு மூலம் செய்யப்பட வேண்டிய தொன்றாகும் | கொள்வனவு வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல்களுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படல் வேண்டும். |

**3.6 ஒப்பந்த நிரிவகிப்பின் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமையின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பம்பல நன்நீர் குஞ்சு பொரிப்பகத்தில் புதிய இனப் பெருக்க நிலையம் ஒன்று நிர்மாணிப்பதற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ரூபா 40.57 மில்லியன் பெறுமதியான தொகை ஒதுக்கீடுகளில் ரூபா 14,789,817 பெறுமதியான தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் நிரமாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. குஞ்சு பொரிப்பகக் கடடிடத்தின் நிர்மாணம், கழிவகற்றல் குழாய் வடிகால் அமைத்தல் போன்றன ஒரே ஒப்பந்தக் காரர் மூலம் செய்து பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் இருந்தும், அவசியமில்லாமல் ஒவ்வொரு வேலைப் பிரிவுகளாக வழங்கியமை தாமதத்திற்குக் காரணமாக இருந்தது. | மேலும், பம்பல நன்னீர் குஞ்சு பொரிப்பக நிலையத்தில் உள்ள குஞ்சு பொரிப்பகத்தை விட புதிய தொழில் நுட்பத்துடன் கூடிய இரண்டாவது குஞ்சு பொரிப்பகம் நிர்மாணிப்பதற்கு அவசியம் ஏற்பட்டதன் காரணமாக மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் பெறுபேறுகளை ஒன்று சேர்ப்பதற்கு காலம் தேவைப்பட்டதால் பூர்த்தி வேலைகளின் இரண்டாவது கட்டத்தினை ஆரம்பிப்பதற்கு சில காலம் எடுத்தது. அதன் காரணமாக இந்தத் தாமதம் ஏற்பட்டது. | வழிகாட்டல் கோவையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா 83 மில்லியன் செலவில் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள ஹுங்கமை நண்டு குஞ்சு பொரிப்பகம் செயற் திட்டத்தின் 85 ஹெக்டயார் நிலப் பரப்பினாலான அரசுக்கு சொந்தமான காணிப் பரப்பு பிரதேச செயலாளர் மூலம் அதிகார சபைக்கு விடுவிக்கப் பட்டிருந்தது. இந்த மேற் குறிப்பிட்ட காணிகளை பிரதேச செயலாளர் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டு இருந்த போதும் அந்த செயற் திட்டத்தின் காணித் துண்டுகளை தனிப்பட்ட முதலீட்டாளர்களுக்கு வழங்குதல் தொடரபாக குறிப்பிட்ட முறைமை ஒன்று தயார் செய்யப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் இலாபத்தைத் திரும்ப அறவிட்டுக் கொள்வதற்கு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்வதற்கான வேலைத் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | இந்த செயற் திட்டம் தொடர்பாக காணித் துண்டுகளை தனியார் துறைக்கு வழங்குவதற்கான முறைமைகள் குறித்து நில ஆணையர் திணைக்களத்துடன் கலந்துரையாடல் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அரச ஒதுக்கீடுகள் இல்லாததால் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட வில்லை என்பதால் பத்திரிகை விளம்பரங்களை வெளியிடுவது தாமதப் படுத்தி உள்ளதால் பயனாளிகள் தேர்ந்தெடுப்பது தாமதமாகி உள்ளது. | செயற் திட்டத்தின் கீழ் காணித் துண்டுகளை வழங்குவதற்காக உரிய பொறிமுறையை வகுக்க வேண்டியதோடு நன்மைகளை மீட்க ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட வேண்டும். |
| (இ) | குசலபங்கதெனிய கடல் அலங்கார மீன் குஞ்சுப் பொரிப்பக நிர்மாணம் தொடர்பாக ரூபா 100 மில்லியன் பெறுமதியான தொகை நிதி ஒதுக்கம் செய்யப் பட்டிருந்தது. இந்த ஒப்பந்தம் 2018 ஆம் ஆண்டு மார்ச் 02 ஆம் திகதி முதல் 9 மாதங்களில் 2018 ஆம் ஆண்டு செப்தம்பர் மாதம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் எனினும் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலும் பௌதீக முன்னேற்றம் 80 வீதமாக மட்டுமே காணப்பட்டது. | கட்டுமானப் பணிகள் தாமதமாகி விட்டன என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். | ஒப்பந்தங்களின் படி நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்தல் தொடர்பாக தேவையான கட்டுப்பாட்டு முறைமைகள் நிறுவப்படல் வேண்டும். அமைக்கப்படும். கட்டுமானப் பணிகளுக்கு இரு மடங்கு காலம் அதிகப் படுத்ததி வழங்கப் பட்டு இருந்தாலும் கட்டுமானப் பணிகள் தாமதமானது. இது தொடர்பாக, 2019 ஆம் ஆண்டு ஜூலை 10 ஆம் திகதி வரை கட்டுமானப் பணிகள் நிறைவடையாததால், நிர்வாகம் தம் கவனத்தை செலுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) மன்னார் ஓலைத்துடையில் கடல் அட்டைகள் குஞ்சு பொரிப்பக நிலையத்தின் நிர்மாணப் பணித் திட்டம் தயாரித்தல் மற்றும் ஒப்பந்த நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனைச் சேவைகள் ஒப்பந்தம் ரூபா 9,895,000 பெறுமதியான தொகைக்கு வழங்கப் பட்டிருந்தது. இது தொடர்பாக ரூபா 7,226,068 பெறுமதியான தொகை நவம்பர் மாதமாகும் போது செலுத்தப்பட்டு இருந்தது. என்ற போதிலும் நிர்மாணப் பணிகள் திட்டமிட்ட அடிப்படையில் பூர்த்தி செய்யப்படாத காரணத்தினால் 2019 ஆம் ஆண்டு மார்ச் 29 ஆம் திகதி மீண்டும் வேறு ஒரு ஆலோசகரை நியமித்து ஒப்பந்த நிர்வாகம் தொடர்பாக ரூபா 3,454,500 பெறுமதியான தொகை செலுத்தப் பட்டிருந்தது. | ஒப்பந்தத்தின் 5 ஆவது உறுப்புரைக்கு இணங்க பொறியியலாளருக்குப் பொறுப்புக் கூறும் பொறியியல் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு இணங்க பொறியியலாளர் தனது அதிகாரங்களை பொறியியல் பிரதிநிதிக்கு வழங்கியுள்ளார். இங்கு பொறியியல் பிரதிநிதி அதாவது ஆலோசனைச் சேவை நிறுவனம் தொடர்பான செயற்பாடுகளுக்கு ரூபா 3,547,500 பெறுமதியான கொடுப்பனவுத் தொகை செலுத்தப்பட்டு இருந்தது. அதன் காரணமாக பொறியியல் பிரதிநிக்கு (ஆலோசனைச் சேவை நிறுவனம்) வாடிக்கையாளரின் தேவையை நிறைவேற்றுவதற்காக வேண்டி மேற் குறிப்பிட்ட பெறுமதியான நிதித் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அது தொடர்பாக அவசியமான கட்டுப்பாட்டு விதிகள் மற்றும் முறைமைகள் அறிமுகப் படுத்தப்பட வேண்டும். கொள்வனவு வழிகாட்டிக்கு ஏற்ப செயற்பட வேண்டும் என்பதுடன் கணக்கீடு செய்யப்பட்ட அடிப்படையில் செயற்பாடுகளை செய்து கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ள வேண்டும். |

## 4. பொறுப்புக் கூறல் மற்றும் நல்லாட்சி

### 4.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமையின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 02 ஆம் திகதியிடப்பட்ட பி ஈ டி / 12 இலக்க அரச தொழில் முயற்சி சுற்றறிக்கை 6.5.1 பந்திக்கு இணங்க நிதி ஆண்டு முடிவடைந்து 60 தினங்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக சமர்ப்பிக்க வேண்டும் எனினும் கூட்டுத்தாபனத்தின் மூலம் மீளாய்வு ஆண்டு தொடர்பாக நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வுக்காக 75 நாட்கள் பிந்திய நிலையிலேயே அதாவது 2019 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சட்ட மூல வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | முகாமையின் கருத்துத் தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். |

## 4.5 உள்ளகக் கணக்காய்வு

| | கணக்காய்வுஅவதானிப்புக்கள | முகாமையின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2018 ஆம் ஆண்டு உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடங்கி உள்ள ரூபா 662.87 மில்லியன் பெறுமதிவாய்ந்த செயற்பாடுகளுக்கு உள்ளகக் கணக்காய்வு விசாரணைகள் நடைமுறைப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஊழியர்களுக்கு ஏற்றவாறு பல திட்டங்களைத் தயாரிக்க அறிவுறுத்தப்படுகிறது. | நிதி விதிமுறைகள் 133 இன் படி உள்ளகக் கணக்காய்வு பலப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டு வெளியிடப் பட்ட 11 அறிக்கைகளுடன் சம்பந்தப் பட்ட உள்ளகக் கணக்காய்வுப் பரிந்துரையை நடைமுறைபடுத்துவது சம்பந்தமாக பின்னூட்டல் இடுவதுஉள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் இடம் பெறவில்லை என்பது அவதானத்திற்கு உட்பட்டுள்ளது. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் சேவை செய்கின்ற முகாமைத்துவ உதவியாளர்கள் இருவருக்கு அதிகாரசபையின் பிரதான காரியாலயம் உட்பட 47 அலகுகளும், மத்திய நிலையங்கள் வேலைத் திட்ட காரியாலயம் மற்றும் கண்காணிப்பு அலகுகளுடன் அவற்றில் 700 இற்கும் அதிகமான ஊழியர்களின் செயற்பாடுகளை கணக்காய்வுக்கு உட்படுத்த வேண்டி உள்ளது. அதனால் போதுமான அளவு ஊழியர்கள் இன்றி உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தையும் நிவர்த்த செய்ய முடியாமல் போனதுடன் கணக்காய்வு பரிந்தரைகளை செயற்படுத்தல் மற்றும் அது சம்பந்தமாக பின்னூட்டல் இடுவதும் குறைந்துள்ளன. எவ்வாறாயினும் எதிர் காலத்தில் இந்த நிலைமைகளைக் குறைத்துக் கொள்வதற்கான உபதேசங்கள் வழங்கப்பட்டுள்ளன. | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளில் காணப்படுகின்ற குறைபாடுகள் குறித்துக் கவனம் செலுத்தி அனைத்தையும் நிவர்த்திப்பதற்காக நிதி விதி முறைகள் 133 ற்கு இணங்க அவசியப்படுகின்ற ஏற்பாடுகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் தயார்படுத்த வேண்டும். |
| (இ) | நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி மையங்கள் 16, பிரதான காரியாலயங்கள் உட்பட மாவட்ட நீர் உயிரினத் திட்டக் காரியாலயங்கள் 23 உம் உதவிப் பணிப்பாளர் காரியாலயங்கள் 4 மற்றும் கண்காணிப்பு அலுவலகங்கள் (Monitoring Office) 03 உட்பட 47 | நிர்வாகம் கருத்து தெரிவிக்கவில்லை. | நிதி ஒழுங்குமுறை 133 இல் கவனம் செலுத்தி மற்றும் உள்ளகக் கணக்காய்வை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கவும். |

அலுவலகங்களின் நிதிக் கணக்காய்வு, முறைமை பகுப்பாய்வுகள் மற்றும் விசேட விசாரணைகள் மீது கவனத்தை இட்டு உள்ளகக் கணக்காய்வு விடயங்களை பலமான முறையில் செயற்படுத்துவதற்குப் போதுமான உள்ளககணக்காய்வு ஊழியப்படை ஒன்று இன்மையால் போதிய பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு இருக்கவில்லை.